DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 312/2023

Prosecution Witness -P.W. 3

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. பன்னீர் செல்வம் |
| Father's Name | : | க/பெ. அருள்சிகாமணி |
| Village | : | தோவாளை |
| Taluk | : | பூதப்பாண்டி |
| Caste | : | நாடார் |
| Calling | : | வீட்டுவேலை |
| Religion | : | கிறிஸ்தவர் |
| Age | : | 67 |
| Date | : | 07.08.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2024.

( 1, 2 மற்றும் 4 எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர். 3 ஆம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். )

07.08.2024

முதல் விசாரணை :-

நான் ஆரல்வாய்மொழியில் கிறிஸ்து நகரில் வசித்து வருகிறேன். இந்த வழக்கின் சாட்சி ஜெயாவை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளில் மூன்று பேரை எனக்கு தெரியும். இங்கிருந்து பார்த்தால் எனக்கு கண் தெரியவில்லை என்று சாட்சி கூறியதால் அவரை எதிரிகளின் அருகில் இருந்து பார்த்து அடையாளம் சொல்ல சொல்லியபோது 1, 2 மற்றும் 4 ஆம் எதிரிகளை சரியாக அடையாளம் சொன்னார். (மீண்டும் சாட்சி கூண்டில் ஏற்றப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, விசாரணை தொடர்ந்தது).

ஜெயாவின் கணவர் ஏசுதாசனை எனக்கு தெரியும். ஜெயா மாதத்திற்கு ஒரு முறை எனது வீட்டிற்கு சுய உதவி குழு சம்பந்தமாக பேச வருவார். ஏசுதாசனும், அன்பழகனும் சண்டை போட்டதாக சொன்ன அன்று ஜெயா என் வீட்டிற்கு வரவில்லை. ஏசுதாசனுக்கு என்ன ஆகியது என்று எனக்கு தெரியாது. அன்று இரவு 10 மணியளவில் இறந்து விட்டதாக கேள்விபட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்.

அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத கோரி அனுமதிக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்) :-

09.06.2023 ஆம் தேதி இரவு 8.15 மணிக்கு அ.சா. 1 ஜெயா எனது வீட்டிற்கு வந்து குழு விசயமாக பேசிக் கொண்டு இருக்கும்போது சண்முகநாதனிடமிருந்து ஆஜர் நான்கு எதிரிகளும் ஏசுதாசனை கொலை செய்ய கிறிஸ்து நகர் செல்லும் பாதைக்கு செல்லும் அருகே நின்று கொண்டிருப்பதாக தகவல் வந்தவுடன் அ.சா. 1 ஜெயா அந்த இடத்திற்கு போகும் போது நானும், ஜெயாவுடன் சென்று கொண்டிருந்தபோது எதிரிகள் நான்கு பேரும் சேர்ந்து ஏசுதாசன் டேவிட் கடை பக்கம் பைக்கில் வந்தபோது தங்க ஜோஸ் அந்த பைக்கை பிடித்து நிறுத்த விஜயனும், மணிகண்டனும் ஏசுதாசனை பைக்கிலிருந்து இழுத்து கீழே தள்ளிபிடித்து வைத்தார்கள் என்றும், அன்பு கையில் வைத்திருந்த கத்தியால் ஏசுதாசனின் மார்பிலும், வயிற்றிலும் மாறி மாறி குத்தினார்கள் என்றும், ஏசுதாசன் சத்தம் போட்டார் என்றும், இந்த சம்பவத்தை பக்கத்தில் உள்ள மெர்குரி விளக்கு வெளிச்சத்தில் நானும், ஜெயாவும், சாட்சி சண்முகநாதனும் பார்த்ததாகவும், நானும் மற்ற சாட்சிகளும் அருகில் சென்றவுடன் அன்பு கையில் இருந்த கத்தியை காட்டி, தேவுடியாமக்கா பக்கத்தில் வந்தால் உங்களையும் குத்தி கொலை செய்து விடுவோம் என்று மிரட்டி விட்டு பக்கத்தில் நின்ற இரண்டு மோட்டார் சைக்கிளில் நான்கு பேரும் போய் விட்டார்கள் என்றும், அந்த வழியே வந்த ஸ்டீபன் என்பவரின் பைக்கில் காயம் ஏற்பட்ட ஏசுதாசனை ஏற்றி கொண்டு அவரும் சண்முகநாதனும் சேர்ந்து

மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், கொஞ்ச நேரம் கழித்து ஏசுதாசன் இறந்து விட்டதாகவும் கேள்விபட்டேன் என போலீசார் விசாரிக்கும்போது நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரிக்கும்போது அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (1 ஆம் எதிரி தரப்பில்) :-

வில்லவிளையில் அன்றைய தினம் சாதி கலவரம் நடந்தது என்றால் நடந்ததாக கேள்விபட்டேன் எனக்கு தெரியாது.

மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.